**Cross Examination**
**Dated: 17.07.2023**
ஒ.எஸ்.எண். 69/2018, PW-2, திரு. அஜ்மல் அலி, த/பெ. முகமது அலி
சாட்சி வ.வி.எண்.316/2022, நாள்- 12.12.2022ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக அனுமதிக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிரதிவாதி சோமையாவை 2016-ம் வருடம் முதல் எனக்கு தெரியும். பிரதிவாதி, வாதியிடம் எப்பொழுது, எவ்வளவு கடன் கேட்டார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பிராமிசரி நோட்டு எழுதும் சமயத்தில் வாதி அன்று சுமார் மதியம் 12.00 மணியளவில் என்னை சாட்சியாக அழைத்தார். நான் சாட்சி கையெழுத்து போடுவதற்கு வாதியின் கடைக்கு சென்றேன். நான் போகும்போது பிராமிசரி நோட்டில் யார் யார் கையொப்பம் போட்டிருந்தார்கள் என்றால் யாரும போடவில்லை. நான போனபிறகுதான் பிராமிசரி நோட்டு எழுதினார்கள். பிராமிசரி நோட்டை எப்போது எழுத ஆரம்பித்து எப்போது முடித்தார்கள் என்றால் நான் வந்ததும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அதன்பிறகு எழுத ஆரம்பித்து 10 நிமிட நேரத்தில் முடித்துவிட்டார்கள். வாதி எந்த வங்கியிலிருந்து, எவ்வளவு பணம் எடுத்து கொண்டு வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. கடன் கொடுப்பதற்கு முன்பாகவே அவர் வங்கியிலிருந்து பணம் எடுத்து வைத்திருந்தார். எப்பொழுது எடுத்து வந்தார் என்றால் நான் வருவதற்கு முன்பே அவர் எடுத்து வந்துவிட்டார். வங்கியிலிருந்து எடுத்து வந்தது போக கடையிலிருந்து வாதி எவ்வளவு பணம் எடுத்து கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2000 ரூபாய் நோட்டுக்கள் மற்றும் 500 ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தார். 2000 ரூபாய் நோட்டுக்களாக எவ்வளவு, 500 ரூபாய் நோட்டுக்களாக எவ்வளவு என்று எனக்கு தெரியாது. பணம் கொடுத்த சமயத்தில் வாதியின் கடையில் எத்தனை பேர் வேலையில் இருந்திருப்பார்கள் என்றால் சுமார் 5, 6 நபர்கள் வேலையில் இருந்தார்கள். வேலைக்கு இருந்த நபர்களின் பெயர்கள் என்ன என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் இதற்கு முன் இந்த வாதிக்கோ அல்லது வேறு நபருக்கோ சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிராமிசரி நோட்டு எழுதப்பட்டது எந்த பேனாவால் எந்த கலரில் எழுதப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் ஐந்து வருடங்களுக்கு முன் எழுதப்பட்டது, தற்போது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எத்தனை ரூபாய்க்கு ரெவின்யூ வில்லை ஒட்டப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. வாதியின் கடையில் வேலை பார்க்கும் சுகன்யா, செல்வகுமார் ஆகியோர்களை எனக்கு

தெரியுமா என்றால் தெரியாது. என்ன தேவைக்காக பிரதிவாதி கடன் வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்றால் கோழிப்பண்ணை நடத்துவதற்கும், குடும்ப செலவிற்காகவும் கடன் பெற்றதாக கடனுறுதி பத்திரத்தில் எழுதினார்கள். வாதி மற்றும் பிரதிவாதிகளின் வரவு, செலவு கணக்கு விபரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வதுபோல் என் முன்னிலையில் வாதியிடமிருந்து பிரதிவாதி எந்த தொகையும் வாங்கவில்லை என்றாலும் என் முன்னிலையில் எந்த பிராமிசாரி நோட்டும் எழுதி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான், வாதி, மாணிக்கம், திருநாவுக்கரசு ஆகியோர்கள் சேர்ந்து போலியான பிராமிசரி நோட்டு தயார் செய்து,அதற்கு ஆதரவாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சாட்சிய கையொப்பம் போட்டதாக சொல்லும் பிராமிசரி நோட்டின் அடிப்படையில் பிரதிவாதிக்கு எந்த ஒரு பணப்பரிமாற்றமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வாதி எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.